# தமிழ்ப்போராளிகளைக்கட்டுப்படுத்துமாறு தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு நெருக்குதல்

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு பற்றி ஆராயும் முகமாக மத்திய உள் துறை இணையமைச்சர் சுபோத்கான் சஹாய் அடுத்தவாரம் சென்னை வரவுள்ளார் தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளை கட்டுப் படுத்த மத்திய அரசு தமிழக அரசிற்கு நெருக்குதல் கொடுக்கும் முகமாகவே அமைச்சின் இவ் விஜயம் அமைவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர் தமிழ் நாட்டில் போராளிகளின் நடவடிக்கைகளைக் குறைக்க மத்திய அரசு, தமிழ் நாடு அரசிற்கு உதவும் என நேற்று முன்தினம் முதலமைச்சர் கருணாநிதிக்கும் இணையமைச்சர் சஹாயிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது உறுதியளிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதே வேளை தமிழக கரையோரங்களில் பாதுகாப்பு நடவடிக்கையை அதிகரிக்கும் படி தமிழக அதிகாரிகளுக்கு புதுடில்லியில் இருந்து உத்தரவு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-00

முரசொலி

முரசு 05 ஒலி 09 பிரமோதூத கார்த்திகை 20 (06-12-1990) வியாழன்

அம்பாறை மாவட்ட பாணம பகுதியில்

# அதிரடிப்படையால் 10 தமிழர் படுகொலை

## அறுபது இளைஞர்கள் கைது

**கடந்த ஞாயிறு அம்பாறை - பாணம பகுதியில் விசேட அதிரடிப் படை மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக பத்துத் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**

கடந்த ஞாயிறன்று அம்பாறையில் விசேட அதிரடிப் படை மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து தற்போது சம்பவம் நடைபெற்ற பாணமப் பகுதி அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

இதுவரை இப்பகுதியில் இருந்து அறுபது இளைஞர்கள் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமிற்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டவர்கள் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிறு பாணமப் பகுதியில் அதிரடிப்படை மீது நடத்தப்பட்ட தாக்குதலில 7 படையினரும் அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டதும் அவர்கள் வந்த வாகனம் பலத்த சேதமடைந்ததும் தெரிந்ததே.

விடுதலைப் புலிகளினால்

# அம்பாறைத் தாக்குதலில் ஆயுதங்களும் மீட்கப்பட்டன

அம்பாறையில் அதிரடிப் படையினர் மீது நடாத்தப் பட்ட தாக்குதல்குறித்துநேற்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாணமை இராணுவ முகாமில் இருந்து ஜீப்பில் வந்து கொண்டிருந்த விசேட அதிரடிப் படையின் மீது விடுதலைப்புலிகள் பதுங்கித் தாக்குதல் நடத்தினர்.

கடந்த ஞாயிறன்று பாணமைக்கும் பொத்துவிலுக்கும் இடையில் இடம் பெற்ற இத்தாக்குதலில் 7 படையினர் பலியானார்கள்.

இவர்களிடமிருந்து ஜீ 3. எல் எம் ஜீ ரக துப்பாக்கி-1 மகசீன் - 6, கோல் கொமாண்டோ- 3, மகசீன் 11, எஸ் எல ஆர்-1, மகசீன்- 1, தொலைத் தொடர்புகருவி 1, நோட டோரவை - 140,5 56 ரவை- 300 ஆகிய ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டன.

—04 ஆம் பக்கம் பார்க்க

# திருக்கோவிலில் கண்ணிவெடி கவச வாகனம் முற்றாகச் சேதம்

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் இராணுவ முகாமில் இருந்து கவச வாகனத்தில் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது வாக்குசார் வீதியில் விடுதலைப் புலிகள் கண்ணிவெடித்தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 7. 30 மணியளவில் இடம் பெற்ற இக்கண்ணி வெடித் தாக்குதலில் கவச வாகனம் முற்றாகச் சேதமடைந்தது இதில் சென்ற இராணுவத்தினர் அனைவரும் இறந்திருக்கலாம் எனவும் தெரிய வருகிறது. (71)

இராணுவ நடவடிக்கையால்

# நல்லூர் பிரதேச சபைக்கு 30 லட்சம் ரூபா நஷ்டம்

அண்மைக்கால விமானத் தாக்குதல்களால் நல்லூர் பிரதேசசபை மின்சாரப்பகுதிக்கு 30 லட்சம் ரூபாவுக்கு அதிகமான தொகை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதில் திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையிலுள்ள பிரதான உப மின்சார நிலையம் சேதமடைந்ததால் பதினேழு லட்சத்து நாற்பத்தி ஐயாயிரம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என இச் சபையின் புதிய விசேட ஆணையாளரும் நல்லூர் உ. அ. அதிபருமான திரு. ஆ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (66)

# உணவுப் பற்றாக்குறை முகாமிற்கு நிவாரணம் வழங்கப்படும்

உணவுப் பற்றாக்குறை நிலவும் அகதி முகாம்களிற்கு உலர் உணவு நிவாரணம் வழங்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

உணவுப் பற்றாக்குறை நிலவும் அகதி முகாம்களின் பொறுப்பாளர்கள் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு இந் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசினால் வழங்கப்படும் நிவாரணம் பல அகதி முகாம்களிற்குத் திருப்தியான அளவில் போய்ச் சேராததாலேயேயாழ் செஞ்சிலுவைச் சங்கம் இம் முயற்சியை மேற் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (70)

# தீவுப்பகுதி தெற்கு உ.அ.அ.பிரிவு இரண்டு பிரிவாக பிரிக்கப்படும்

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வெகு விரைவில் இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்படவிருக்கின்றது.

ஏற்கனவே இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவுஎன்ற பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

தற்போது புதிதாகப் பிரிக்கப்படவிருக்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புங்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# நகரில் கட்டாக்காலி நாய்கள் பிடிப்பது ஆரம்பம்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அறிவித்தலையடுத்து நேற்று யாழ் நகரில் பரவலாக பெருந்தொகையான கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டன.

நேற்றைய தினம் யாழ் நகரில் நாய் பிடிப்பதை அறிந்த வீட்டு நாய் உரிமையாளர்கள் நாய்களைப் பாதுகாப்பாக வீடுகளில் கட்டிவைத்திருந்ததையும் காண முடிந்தது. (33, 50)

# முல்லைத்தீவு மாணவர்களுக்கு 3 மாத மதிய உணவு முத்திரை

முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் முயற்சியில் இப் பகுதிப் பாடசாலை மாணவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு மதிய உணவு முத்திரை வந்துள்ளது.

இதேவேளை இப்பகுதியில் இலவச உணவு வழங்குவதையடுத்தே உணவுமுத்திரைக்கான உணவுப் பொருட்கள் விநியோகம் புரட்டாதி வரை 6-ம் புள்ளிக்கு வழங்கப்பட்ட போதிலும் தொடர்ந்து வழங்கப்பட வில்லை.

உணவுப் பொருட்கள் கையிருப்பிலில்லாததே இதற்கு காரணமெனத் தெரியவருகிறது (38)

வடக்கு கிழக்கு இணைப்பு

# சர்வசனவாக்கெடுப்பு அடுத்த ஆண்டு ஆகஸ்ட்டில்

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைப்பது தொடர்பாக சர்வசனவாக்கெடுப்பு அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்த வாக்கெடுப்பு நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

# சில இடங்களில் பாண்விற்பனை

சில தினங்களுக்கு பாண் விற்பனை தடை செய்யப் பட்டுள்ள போதும் நேற்று முன் தினமும், நேற்றும் சில இடங்களில் தனியார் கடைகளில் பாண் விற்பனை நடைபெற்றதைக் காணமுடிந்தது.

யாழ் மாவட்ட பேக்கரியாளர் சங்கம் பாண் போடுவதை நிறுத்துமாறும் அறிவித்திருந்தும் சில பேக்கரிக்காரர்களால் பாண் போடப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் 'சிரித்திரன்'

நீண்டகால இடைவெளியின் பின் 'சிரித்திரன்' சஞ்சிகை வெளிவந்துள்ளது. பாரிசவாதத்தினால் பாதிக்கப் பட்டிருந்த போதிலும் தனது அயராத முயற்சியினால் திரு. சிவஞானசுந்தரம் அவர்கள் மீண்டும் இந்த இதழை வெளியிட்டுள்ளார்,

'சிரித்திரனுக்கு' முரசொலி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

மின்சாரம் இல்லாததினால்

# நூல் இருந்தும் - மின்தறி நெசவாலைகள் இயங்கமுடியாநிலை

குடாநாட்டின் பல்வேறுபகுதிகளில் இயங்கி வந்த மின்தறி நெசவாலைகள் தற்சமயம்பூட்டப்பட்டு இயங்காதுள்ளது.

மின்சார மின்மையே இதற்கான காரணமாகக் கூறப்படுகிறது கைவசம் உற்பத்திக்குத் தேவையான நூல்கள் மற்றும் பொருட்கள் இருந்தும் ஆலைகளை இயக்கமின்சாரம் தடையாகவுள்ளதாக அறிய முடிகிறது.

உள்ளூர் உற்பத்தி இன்மையால் துணிவகைகளின் விலை அதிகரித்துள்ளதுடன் இவ் ஆலைகளில் கடமையாற்றிய பல தொழிலாளர்களும் வேலையிழந்துள்ளனர். (ப-1)

யாழ் தாதி மாணவருக்கு

# அமைச்சு அனுமதி கிடைத்தாலே 6 மாத சம்பளம் வழங்கப்படுமாம்

யாழ் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு கடந்த ஆறு மாத கால சம்பளத்தை வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

மட்டக்களப்பு தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுவோருக்கு இக்காலப் பகுதிக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டன.

இதுபற்றி யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகப் பிரிவிடம் கேட்டபோது சுகாதார அமைச்சிலிருந்து அதற்கான அனுமதி பெறப்பட வேண்டியுளளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சிறு விளம்பரம்

### சேவை

மீண்டும் யாழ் நகரில் தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 'ஸ்கைலைன்ஸ்' 281B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். காலை 9.00 மணி முதல் மாலை 2 00மணிவரை Skylines, 281B, Clock Tower Road Jaffna (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை) 12011

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண் டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12043

### விற்பனைக்கு

சீருடைகளைப் பளிச்சிடும் வெண்மையாகவும் துரிதமாகவும் சலவைசெய்திட மில்க்வைற் சலவைப் பவுடர் நம்பகரமானது, சிக்கனமானது. 50 கிறாம் பைக்கற் ரூ 3/- மட்டுமே. 100 வெற்றுப்பைக்கற் அனுப்பி ஒரு லேஞ்சியை அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க் வைற்- யாழ்ப்பாணம். 12044

## ஆலயத்தில் அகதி மண்டபம்

பெருகிவரும் அகதிகளின் வசதி வாய்ப்புகளைக் கருதி தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய சூழலில் ஒரு மாபெரும் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது

இதனைத் தேவஸ்தான தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்துவைத்தார். இம் மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கு 35,000 ரூபா வரை செலவாகியுள்ளது. இப்போது இப்பகுதியில் 800 இற்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ப-33)

## சித்திரமேழியில் நூல் வெளியீடு

ஆத்ம தத்துவஞான பேராசிரியரும், ஜோதிட விஞ்ஞான நூலாசிரியருமான த. சத்தியதாஸன் எழுதிய டிசம்பர் ''சனி மாற்றம்'' சஞ்சிகை வெளியீட்டு வைபவம், சித்திரமேழிப் பழனியானந்தன் சன சமூக நிலையத்தில், பொ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது.

## நல்லூர் முருகன் சனசமூக நிலைய ஆண்டுக் கூட்டம்

நல்லூர் முருகன் சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் 16-ம் திகதி கர்லை நல்லூர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடத்தலுக்கு மரண தண்டனை

கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை விதிப்பதற்கான தீர்மானத்தை பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

# 31-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 02 - 07 - 1972



இறப்பு: 06 - 11 - 1990

## செல்வன் அகஸ்ரின் சதீஸ்குமார்

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மண்ணுலக வாழ்வை விட்டு இறைவனடி வாழ்வைத் தேடிப் பறந்த எம் குமரா! உன் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
சகோதரிகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

அந்தோனியார் கோவில் வீதி,
புலோப்பளை கிழக்கு,
பளை.

12046

பனை அபிவிருத்திச் சபையின்

# வவுனியா அலுவலக கட்டிடத்தை சுவீகரித்து சர்வோதயத்திடம் கையளிக்க பௌத்த பிக்கு முயற்சி

வவுனியாவிலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் வன்னிப் பிராந்திய அலுவலகக் கட்டிடத்தைச் சுவீகரித்து அதனை சர்வோதய அமைப்பிடம் பணிமனை அமைப்பதற்கென கையளிக்க கொழும்பில் பௌத்த பிக்கு ஒருவர் பலத்த முயற்சி எடுத்து வருவதாக அறியப்படுகின்றது.

1983-ம் ஆண்டு இனக்கலவர காலப்பகுதியில் சேதமடைந்து கைவிடப்பட்ட இக் கட்டிடம் 1986 -ம் ஆண்டு வவுனியா அரசாங்க அதிபரினால் பனை அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

பின்னர் இக்கட்டிடம் புனரமைக்கப்பட்டு வன்னிப் பிராந்திய தலைமை அலுவலகமாக மாற்றப்பட்டு செயற்பட்டு வந்தது.

தற்போது வவுனியா நகரில் இராணுவ நடவடிக்கையையடுத்து இக்கட்டிடத்தை சுவீகரித்து அதனை சர்வோதய பணிமனையாகமாற்றகுறித்த பௌத்தபிக்கு முயற்சிப்பதாகவும் தெரிவிக்கபபடுகின்றது.

கொழும்பில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு செயற்படும் சர்வோதய நிறுவனம் வடக்கு கிழக்கு எல்லைப்பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதில் முன்னின்று செயற்படுவதாகவும் வெளிநாடுகளிலிருந்துவடக்குகிழக்கு அபிவிருத்திக்கென பெருமளவு நிதியைப் பெற்று அதனை பெரும்பான்மை மக்களின் நலனுக்கு செலவிட்டு வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (36)

# மலையகப்பகுதியில் வாக்காளர் இடாப்புக்களில் உள்ள தமிழ்ப் பெயர்கள் திட்டமிட்ட அடிப்படையில் நீக்கம்!

மலையகப் பகுதியில் தமிழ் வாக்குகள் வாக்காளர் பதிவேடுகளில் இருந்து திட்டமிட்ட அடிப்படையில் நீக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நுவரேலியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழ்வாக்குகள் திட்டமிட்டு வெட்டப்பட்டுள்ளன. இங்கு 1988 ஆம் ஆண்டை விட தமிழ் வாக்காளர் தொகை குறைந்துள்ளது.

இப்பகுதிகளில் தமிழ் வாக்காளர் தொகையும் குறைந்து வருகிறது. எம்மைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்க மலையகத்தில் ஊடுருவல் செய்ய சில சக்திகள் முயலுகின்றன என கொட்டகலை எதன் சைட் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கலைவிழா பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட உல்லாச கிராமிய தொழிற்றுறை அமைச்சர் செள. தொண்டமான் பேசுகையில் தெரிவித்துள்ளார். (38)

## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

சுன்னாகம் சந்தைப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்து வருகின்றது.

கடந்த சில தினங்களில் தொடர்ச்சியாக மூன்று சைக்கிள்கள் பூட்டுடைத்துத் திருடப்பட்டுள்ளன. (ப-2)

## பிரேத பரிசோதனை டாக்டரில்லை

இயற்கை மரணம் தவிர வேறு விதமாக மரணம் அடைபவர்களை பிரேத பரிசோதனை செய்வதற்கு தீவுப் பகுதியில் டாக்டர்கள் இல்லாதிருப்பதுபற்றி சுட்டிக்காட்டப்படுகின்றது.

இங்குள்ள ஒரேயொரு தகுதி வாய்ந்த டாக்டர் விடுமுறையில் சென்றால் பிரேதபரிசோதனை செய்வதற்கு வேறு டாக்டரின்றி இறந்த சடலம் பழுதடைய வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

கடந்த சிலதினங்களிற்கு முன்னர் வேலணையில் ஓர் மாது மர்மமான முறையில் இறந்தார். இவரது சடலத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கு டாக்டர் இங்கு இல்லாததனால் விடுதலைப் புலிகளினால் யாழ்ப்பாணத்திலிருந்தே டாக்டர் வரவழைக்கப்பட்டு மறுநாள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இதற்கிடையில் சடலம் பழுதடைந்து துர்மணம் ஏற்படத் தொடங்கி விட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (24)

## அஞ்சனந்தாழ்வு ஆரோக்கிய அன்னை திருவிழா

நாவாந்துறை – அஞ்சனந்தாழ்வு ஆரோக்கிய அன்னையின் திருவிழா இம் மாதம் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் கொண்டாடப்படவுள்ளதாக நாவாந்துறை பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

7-ம், 8-ம் திகதிகளில் மாலை 4. 30 மணிக்கும், 9-ம் திகதி காலை 7. 30 மணிக்கும் ஆராதனைகள் இடம்பெறும்.

## தீவுப்பகுதியில் டெங்கு பரவுகிறது

தீவுப்பகுதியிலும் டெங்கு காய்ச்சல் நோய் பரவத் தொடங்கியுள்ளது.

இக்காய்ச்சல் மூன்று நாட்கள்வரை நோயாளருக்கு பெரும்வேதனையைக் கொடுக்கின்றது.

இந்த நோயினால் பீடிக்கப்பட்ட பலர் அரசினர் ஆஸ்பத்திரிகளிலும், தனியார் வைத்திய சாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (24)

மிதிவெடிகள் அகற்றப்படுகிறது

# பண்ணை-காவலூர் வீதியை மீண்டும் திறக்க முயற்சி!

தீவுப்பகுதியின் பிரதான போக்குவரத்துப் பாதையான பண்ணை - ஊர்காவற்றுறை வீதியை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி வீதி பல இடங்களில் உடைபட்டுள்ளதனாலும், ஸ்ரீலங்கா இராணுவம் ஆங்காங்கே வீதிகளில் மிதிவெடிகளைப் புதைத்து வைத்துள்ளதனாலும் இவ் வீதி திறப்பதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றது.

மிதிவெடிகள் அகற்றும் பணியில் விடுதலைப் புலிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றார்கள் மிதிவெடிகள் அகற்றப்பட்டதும், வீதி திருத்தப்பட்டு மக்கள் வழமைபோல் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என அறியப்படுகிறது. (24)

தீவைப்பு தொடர்பாக நால்வர் கைது

# 50 இலட்சம் ரூபா செலவில் அவினாசியில் புதிய பெரிய தேர்

கடந்த 23-ம் திகதி தமிழகம் அவினாசி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் தீயினால் முற்றாக சேதமான பெரிய தேருக்குப் பதிலாக 50 லட்சம் ரூபா செலவில் புதிய தேர் ஒன்று கட்டப்படவுள்ளது.

இந்த விபத்தில் சேதமான சிறிய தேரும் 10 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த இரு தேர்களும் எரிந்தது தொடர்பாக நால்வரை தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் போதைப்பொருள் பாவிக்கும் பழக்கமுடையவர்கள் என்றும் சம்பவதினம் இவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெரிய தேரில்அமர்ந்தவாறுபோதைப் பொருள் அடங்கிய சுருட்டை பற்றவைத்த சமயம் தேர் தீப்பற்றியதாகவும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

# சைக்கிள் போல்ஸ்களும் வடக்கிற்கு எடுத்துவரத் தடை!

வடபகுதிக்கு எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலில் தற்போது சைக்கிள் போல்ஸ்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சைக்கிள் உதிரிப்பாக வியாபாரிகளினால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட சைக்கிள் போல்ஸ் குண்டுகள் வவுனியாவில் வைத்து இராணுவத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவற்றை எடுத்து வந்தோர் எச்சரிக்கப்பட்டுமுள்ளனர். (38)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# வெள்ளியில் இறைச்சிக் கடை

ஆசிரியர்,
முரசொலி.

எல்லாச் சமயத்தினரும் பூஜை, வழிபாடுகளுக்குரிய விசேட தினமாகக் கொள்ளும் வெள்ளிக்கிழமையில் இறைச்சிக் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்வது சமயத் துரோகமாகும்.

இது அடாத செயலென எழுதிய தங்களைப் பாராட்டுகிறோம்.

இதைத் தடுப்பதில் நன்மக்கள் சிரத்தை கொள்ள வேண்டும். இம்முயற்சிக்கு, சைவர்கள் சார்பில், எமது ஆதரவு உண்டு.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம்

# மன்னார் கிராமங்களில் மூன்றுகால் மிருகங்கள்

மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரம், மாந்தை, சிறு நாவற்குளம் போன்ற கிராமங்களில் மூன்று கால்களை மட்டும் உடைய கால்நடைகளை பெருமளவில் காண முடிகின்றது.

இந்தக்கிராமங்கள் தள்ளாடி இராணுவ முகாம்களுக்கு அருகிலுள்ளன.

அந்த முகாமைச் சுற்றி இராணுவத்தினர் பெருமளவில் புதைத்துவைத்துள்ள மிதிவெடிகளில் சிக்கியே இந்தக் கால் நடைகள் தமது கால்களை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில் தினமும் இவ்வாறு பெருமளவு கால்நடைகள் தமது கால்களை இழந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-32)

# மருந்து கட்டும் துணிகள் வைத்தியசாலைகளில் இல்லை

வடபகுதியிலுள்ள அநேக மருந்தகங்கள், வைத்தியசாலைகளில் மருந்துகட்டும் துணிகள், சத்திரசிகிச்சைக்கு பாவிக்கும் மருந்து வகைகள், பிளாஸ்ரர், பஞ்சு போன்றவற்றிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

இத்தட்டுப்பாட்டை நீக்குமுகமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71, 74)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜனவரியில் நிரந்தர நியமனமில்லை

தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இவர்களுக்கு ஜனவரி மாதம் முதல் நிரந்தர நியமனத்தை வழங்க ஆலோசிககப்பட்டிருந்தது.

ஆனால் இவர்களுக்கு போட்டிப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுமெனவும் அதன் பின்னரேயே நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (16)

## வைத்தியசாலை இடமாற்றம்

சுழிபுரம் பிரதேச சபையின் சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலை அதன் பழைய கட்டிடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்திய இராணுவ நடவடிககையின் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக பிறிதொரு கட்டிடத்தில் இவ் வைத்தியசாலை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ப- 1)

## இராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம்

யாழ்மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய கே. சிவரத்தினம் கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்குப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதையடுத்து இவரது இடத்துக்கு யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கே. பாலகிருஷ்ணன் பதில் யாழ்மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்றுள்ளார்.

கலைத்துறைப் பட்டதாரியான இவர் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளருமாவர். (33)

## மிருசுவில் புனித நிக்கலார் உற்சவம்

மிருசுவில் கண்டிவீதியில் அமைந்துள்ள புனித நிக்கலார் ஆலயத்தில் நேற்று இரவு வருடாந்த உற்சவ வேஸ்பர் ஆராதனைகள் இடம்பெற்றன.

இன்று காலை திருநாள் கூட்டுத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் இடம் பெறும்.

புனித நிக்கலார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தது தினமும் மாலையில் நவநாள் ஆராதனைகள் இடம் பெற்று வந்தன.

மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு லோரன்ஸ் சேவியரின் ஏற்பாட்டில் அருட்திரு லம்பேர்ட் அடிகளார் திருநாள் நவநாட்களை நடாத்தினார்.

### எதிரணி ஆர்ப்பாட்டங்களை அடுத்து

# பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் பதவிவிலகப் போவதாக அறிவிப்பு!

பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் தான் உடனடியாக பதவி விலகப் போவதாக நேற்று அறிவித்துள்ளார்.

நாட்டை நிர்வகிப்பதற்கென காபந்து அரசொன்றை உடன் நிறுவுமாறும், இடைக்கால நிர்வாகத்திற்குப் பொறுப்பாக உப ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்யுமாறும் எர்ஷாத் எதிர்க்கட்சிகளிடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதி எர்ஷாத் உடன் பதவி விலக வேண்டுமெனக் கோரி நேற்று முன்தினம் பங்களாதேஷ் தலைநகரில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் எட்டு மணிநேர பொதுவேலை நிறுத்தமும் இடம் பெற்றிருந்தது.

ஜனாதிபதி பதவி விலகப் போவதாக அறிவித்துள்ள போதிலும் அங்கு எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்ட, வேலைநிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த வருடம் அங்கு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் பொதுத் தேர்தல் நடாத்தப்படும் எனவும் எர்ஷாத் அறிவித்திருக்கின்றார்.

எர்ஷாத்தின் ராஜினாமாவுக்குஆதரவாக நான்கு முன்னாள் அமைச்சர்கள் உட்பட 19 பாராளுமன்ற உறுப்பினர்களும் 100 அரச அதிகாரிகளும் தமது பதவிகளைத் துறந்துள்ளனர்.

சென்ற மாதம் 27-ம் திகதி பங்களாதேஷில் நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் அங்கு இடம்பெற்ற கலவரங்களால் 75பேர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதும் சுமார் 3000 பேர் காயப்படுத்தப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(நேற்றைய தொடர்)

# சந்திரசேகர் எதிர் கருணாநிதி

### வெங்கட்ராமன் பட்ட கடன்

தில்லியை நன்கு ''பேண'' வேண்டிய ஒரு தேவை கருணாநிதிக்கு உண்டு ஜனாதிபதி ஆட்சிப்பிரகடனத்துக்கு இறுதிக் கையெழுத்து வைப்பவர் ஒரு தமிழர். அவர் பலகாலச் சென்னை அஞ்ஞாத வாழ்வின் பின்னர் தில்லிக்கு எம்.பியாகச் செல்வதற்கு தென் சென்னைத் தொகுதியை விட்டுக் கொடுத்தவர் எம். ஜி ஆர். அதனால் அந்த முன்னை நாள் தென்சென்னை எம். பியும் பாதுகாப்பு மந்திரியுமாக இருந்தவருக்கு எப்பொழுதும். எம். ஜி. யாரிடத்து செஞ்சோற்றுக்கடன் உணர்வு உண்டு.

அந்த ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் தில்லியை நன்கு பேண விரும்புகிறார் கலைஞர்.

### பிரபாகரன் 'ஹீரோ'

ஆனால் இந்தப் பயங்களை ஊடறுத்து நிற்பது இன்னொரு அரசியலுண்மை (''ஹிந்து'' ராம் அதனை வலியுறுத்திக் கூறுவார்) ''யார் என்ன சொன்னாலும் பிரபாகரன் தமிழ் மக்கள் சகலரினதும் மனதுக்கும் பிடித்த வீரனாவார். அதுவும் தென் தமிழ் நாட்டில் அதாவது திருச்சி ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம் மாவட்டங்களில் இந்த ''வீரமதிப்பு' உள்ளது''

பிராமணியத்துக்கு எதிரான தி மு க. வின் கருத்து நிலைத்தளமும் இந்தத் தென் தமிழ் நாடுதான்.

எனவே தான் தி. மு. க என்றும் ஈழத்தில் தமிழ்த்தேசியத்தின் சின்னமாக விளங்கும் நிறுவனத்துக்கும் அதன் தலைமைக்கும் எதிராகச் செல்லாது. காமராஜ் மொழியில் சொன்னால் இது ''பச்சைத்தமிழர்''களின் நிலைப்பாடு.

### பிராமணீயத்தின் குரல்?

இந்த நிலைப்பாட்டின் அரசியல் அத்தியாவசியத்தை இப்பொழுது தமிழ்நாட்டில் வற்புறுத்துவது. பி ஜே. பியின் நடவடிக்கையாகும். அனைத்திந்திய மட்டத்தில் இந்து அடிப்படை வாதத்தின் அரசியற் குரலாக மேற்கிளம்பியுள்ள பாரதீய ஜனதாக்கட்சி, தமிழ் நாட்டில் திராவிடக் கருத்து நிலைக்கெதிரான பிராமணிப வாதத்தை ஆதரிப்போரால் ஆதரிக்கப்படுவதாகும்.

பி. ஜே. பி. வெள்ளை அறிக்கை கோருவதன் இரகசியம் இதுதான். தமிழ்நாட்டின் அரசிற் பிராமணியத்தின் குரல் இது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

### உள்ளூர் அரசியல் தேவை

இபபடியான ஒரு சூழ்நிலையில். அதுவும் எந்த நேரமும் தேசியத் தேர்தல் வரக்கூடிய நிலையில் கருணாநிதியை ஆட்டங்காண வைப்பதற்குப் புலிகள் பற்றிய வாதம் அங்கு முன்வைக்கப்படுவது ஆச்சரியமல்ல.

இவையெல்லாம் தமிழ்நாட்டின் உள்ளூர் அரசியல் தேவைகள் காரணமாக மேற்கிளம்புபவை.

பி. ஜே பியும், வாழப்பாடியும் முன் வைக்கும் இந்தக் கோஷங்களின் தாக்கம் இறுதியில் இந்திய அரசாங்கத்துக்கும், இந்திரா காங்கிரசுக்கும் வேறு ஒரு சீவாதாரமான பிரச்சினையை ஏற்படுத்தலாம்.

### பிரேமதாசாவோடு பேசுவது யார்?

இந்திய அரசில் இந்திரா காங்கிரசின் செல்வாக்குக் கூடியுள்ள இன்றைய நிலையில், இந்திய அரசு, இலங்கை அரசுடன் நடத்த வேண்டிய பேச்சுவார்த்தைகளில் நடப்பு நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் வகையில், முன்வைக்கப்போகும் பிரேரணைகள் யாவை? பிரேமதாசா அரசாங்கத்துடன் தமிழர் பிரச்சினை பற்றி முகம் கொடுத்துக் கதைக்கத் தக்க வலு யாரிடமுள்ளது? அந்தப் பாத்திரத்தை வகிப்பதற்கான முழுத்தகைமையும் பெற்றுள்ள ஒரு சக்தியைப் பலவீனப்படுத்தினால், இந்தியாவின் நிலைப்பாடே பலவீனமடையாதா?

இதுதான் தென்னாசியப் பிரதேச மட்டத்தில் இந்திய அரசையும் இந்திரா காங்கிரசையும் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினையாகும்.

### சுக்ளாவின் கருத்து

இதனாலேதான் அந்நிய நாட்டலுவல்கள் அமைச்சர் வி. சி சுக்ளா இலங்கைப் பிரச்சினை சுலபமாக உடனடியாகத் தீர்க்கப்படத்தக்கதல்ல என்று கூறியுள்ளார்.

உறியிலுள்ள தயிர்ச் சட்டியின் வெளிப்புறத்தே நிற்கும் பூச்சியை அடிக்கப்போய், தயிர்ச் சட்டியையே உடைத்த கதையாக இதுமாறலாம் என்பது வித்யா சரண் சுக்ளாவுக்கும் இந்திய அந்நிய நாட்டலுவல்கள் அமைச்சு உத்தியோகத்தர்களுக்கும் தெரியும்.

### ஆயுதத் தீர்வை நாடும் ஸ்ரீலங்காவும் ...

தமிழ்நாட்டில் தி.மு.க. அ தி மு.க. பூசலைத்தீர்ப்பது ஒன்று. தென்னாசியப் பிராந்தியததில் இந்திய நலன்களைப் பேணுவது இன்னொன்று. முதலாவது இரண்டாவதைப்

எமது அரசியல் விமர்சகர்
**க. மா. இராசையா**

பாதிக்கக்கூடாது என்பது அவர்களுக்குத் தெரியும். பிரேமதாசா அரசாங்கம் என்றுமே இந்தியச்சார்பான அரசல்ல. சிறிமாவோ பண்டாரநாயக்காவும், அடிமனதில் படைபலததீர்வையே விரும்புகின்றார் என்பதும் தெளிவு.

இந்தச் சூழலில் இலங்கையின் தமிழர் நலன்கள் எவ்வாறு பாதுகாக்கப்படலாம்?

### ...வன்முறையை எதிர்க்கும் சந்திரசேகரும்

ஆனால் சந்திரசேகரின் பண்புகளில் ஒன்று அவரது வானொலி நேர்முகம் மூலம் தெட்டத்தெளிவாகின்றது. இந்திய அரசியலில் அவர் வன்முறையை எதிர்க்கின்றார்.

### ஊதுகுழலாகிவிட்ட அகில இந்திய வானொலி

இதனை எடுத்துக்கூறும் பொழுது இன்னொரு முக்கிய உண்மையை மறந்து விடக் கூடாது. பழையபடி இந்திய வானொலி இந்திய அரசின் ஊதுகுழலாகிவிட்டது. இந்திய வானொலி இப்பொழுது பேசும் தொனியைப் பார்த்தால், சந்திரசேகர் ஆட்சி, ஒரு சிறுபான்மை ஆட்சி என்பதும், சந்திரசேகர் தனது மந்திரிசபையில் தானே உள்நாட்டமைச்சராகவும் இருக்கின்றார் என்பதும் தெரியவேயில்லை. ஏதோ மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசாங்கத்தினது போன்ற ஒரு குரலே கேட்கிறது.

கருணாநிதி திடமாக இருந்தால் தமிழ்த் தேசியம் அவரைக்காக்கும். அவரும் அதனை வளர்க்கலாம். (முற்றும்)

# வெளிவாரிப் பட்டப்பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

வெளிவாரிப் பட்டப்பரீட்சையை பின் போடுமாறு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பேராதனைப்பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப்பகுதிப் பதிவாளரைக் கேட்டுள்ளார்.

அவ்வாறு பரீட்சையை ஒத்திவைக்கமுடியாதவிடத்து வடக்கு கிழக்குப்பரீட்சார்த்திகளுக்குப் பின்னர் தனியான விசேட பரீட்சையை நடாத்த ஏற்பாடு செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

பேராதனைப்பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் இம் மாதம் 12-ம் திகதி முதல் 29-ம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

இப்பரீட்சையாழ்ப்பாணம், மட்டக்களப்பு நிலையங்களில் இடம்பெறமாட்டாது எனவும் வடக்கு கிழக்குப்பரீட்சார்த்திகள் பேராதனை அல்லது கொழும்பு நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ் மாவட்டத்தில் வெளிவாரிப் பரீட்சைக்கு 1000க்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## க. பொ. த. (சா) டிசம்பர் பரீட்சை விண்ணப்பம் 9-ம் திகதிவரைநீடிப்பு

யாழ் மாவட்ட க.பொ.த (சா.த)பரீட்சார்த்திகளிற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 9-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஏற்கனவே முடிவடைந்து விட்ட போதிலும் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக விண்ணப்பங்கள் அனுப்ப முடியாத நிலையால் இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் இதற்கான விசேட பரீட்சை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (70)

## வவுனியாவில் இரு லொறிகள் தடுத்து வைப்பு

பசளை எடுக்கச் சென்ற இரு லொறிகள் வவுனியாவில் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

துணுக்காய் பனங்காமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான இந்த லொறிகள் வவுனியாவிற்கு பசளை எடுக்கச் சென்று பத்து நாட்களுக்கு மேலாகியும் இராணுவத்தால் விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (38)

## மாணவர் வரவு மிகக்குறைவு

வலி வடக்கு, வலி தெற்குப் பகுதிகளில் அநேகமான பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகவுள்ளது.

சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் வந்திருந்தபோதும் மாணவர்கள் சமுகமளிக்கவில்லை.

அநேகமான மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளமையே இதற்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப-2)

## தேயிலையில் உமிக்கரி கலப்படம்

தற்போது தேயிலையுடன் உமிக்கரியும் கலந்து விற்கப்படுகிறது இத்தேயிலையை வீட்டில் கொண்டு சென்று தேநீர் தயாரிக்கும்போது மணமோ, சுவையோ இருக்காது. கருமை நிறத்தில் தேநீர் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வீதிக்கு வீதி காணப்படும் திடீர்க்கடைகளிலேயே இவை பெரும்பாலும் விற்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

## மானிப்பாயில் மீண்டும் பாதுகாப்புவலையம்

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைச் சுற்றாடல் பாதுகாப்பு வலையமாக செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நேற்று முன்தினம் பொறுப்பேற்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து ஆஸ்பத்திரி முன் வீதி பொது மக்களின் பாவனைக்குத் தடைப்படுத்தப்பட்டுள்ளது- (ப-11, ப.14)

## மன்னாரில் குறைந்தளவு பரீட்சார்த்திகள்

மன்னார்த்தீவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இரண்டுநிலையங்களில் க. பொ. த. (சாதாரணப்) பரீட்சைகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலான மாணவர்கள் இடம் பெயர்ந்திருப்பதால் மிகக்குறைவான பரீட்சார்த்திகளே இதற்கு தோற்றுகின்றனர். (70)

## காலமானார்கள்

### யோர்ஜ் துரைரத்தினம் எவேட்ஸ்
(இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் P. H. I)

சாவகச்சேரியைச் சேர்ந்த யோர்ஜ் துரைரத்தினம் எவேட்ஸ் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் P.H.I) 05.12 90 அன்று காலமானார். இவர் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், லலித்த தேவகுமாரி (U S.A), ஆனந்தராஜன் எவேட்ஸ், சந்திரவதனா (பரியோவான் பாலர் பாடசாலை), நாளினி (இலங்கை வங்கி சாவகச்சேரி), காலம் சென்ற ரவிராஜன் எவேட்ஸ், சித்திராணி (U.K), ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியநாதன்(U.S.A).காந்தினி, சந்திரன், முருகேசம்பிள்ளை (வர்த்தக வங்கி யாழ்ப்பாணம்), தேவானந்தன் (யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்), மோகான் (U. K) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்ற மணி தேவசகாயத்தின் சகோதரருமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 06. 12. 90 வியாழக்கிழமை மாலை 4 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
31, கண்டி வீதி, திரு.S.தேவானந்தன்.
(பழைய பொலிஸ் நிலையம் முன்பாக)
சாவகச்சேரி. 12056

### தம்பிமுத்து முத்துலிங்கம்
(கிளிநொச்சி கச்சேரி லிகிதர்)

கோண்டாவில் கிழக்கு ஆலடி வீதியைச் சேர்ந்த திரு. தம்பிமுத்து முத்துலிங்கம் நேற்று கோண்டாவிலில் காலமானார் இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், சிவபாதசுந்தரம் (மே. ஜேர்மனி), ரவிச்சந்திரன் (மே. ஜேர்மனி), சிவாஜினி (மே. ஜேர்மனி), பிரபாகரன் (மே ஜேர்மனி), ஜெயகிருஷ்ணா, ரமணன், ஜெயவதனா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற திரு. திருமதி தம்பிமுத்து, தையல்முத்து ஆகியோரின் மகனும், சுப்பிரமணியம், இரத்தினம்மா ஆகியோரின் மருமகனும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 6 12 90 பகல் 12 மணிக்கு கோண்டாவில் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

ஆலடி வீதி. தகவல்
கோண்டாவில் கிழக்கு. சகோதரர் ச. துரைமணி
12052

### தம்பிராசா தனபாலசிங்கம் (தனம்)

காலஞ்சென்ற தம்பிராசா பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜெயவீரசிங்கம், குணபாலசிங்கம் (ஜேர்மனி), விஜயபாலசிங்கம் (ந.ப.நோ.கூ, சங்கம்), ரஞ்சனாதேவி (ரஞ்சி), சாரதாதேவி (சாரதா)ஆகியோரின் சகோதரருமாவார், ஈமக்கிரியைகள் 6.12.90 பி ப 3 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும் இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளவத்தை ஒழுங்கை, தகவல்
கொக்குவில் கிழக்கு, விஜி
கொக்குவில். 12055

## வார இறுதி நாட்களில் போராட்டதிரைப்படக் காட்சி

யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும்போராட்ட வாரமானது புகைப்படக் கண்காட்சி நாளையுடன் முடிவடையவுள்ளது.

கடந்த 22 ம் திகதி முதல் இப்புகைப்படக் கண்காட்சி இடம் பெற்று வருகிறது இது வரை சுமார் இரண்டு லட்சம் மக்கள் இக்கண்காட்சியை பார்வையிட்டுள்ளனர்.

நேற்று மட்டும் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் புகைப்படக் காட்சியைப் பார்வையிட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து வாரம் தோறும் சனிக்கிழமை மாலையில் தமிழீழ போராட்ட திரைப்படக் காட்சிகளும் ஞாயிற்றுக் கிழமை காலை கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (74)

### 4-ஆம் கட்டம் பெறமுடியாத நிலை

## இளவாலைப் பகுதி மக்களுக்கு உணவு அட்டை வழங்கவில்லை

இளவாலைப் பகுதியில் J 155 பகுதி கிராமசேவகர் பிரிவு மக்கள் நாலாம் கட்ட நிவாரணம் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்பிரிவில் உள்ள சுமார் 250 குடும்பங்களுக்கு இன்னமும் புதிய உணவு அட்டை வழங்கப்படாததால் இவர்கள் தினமும் இந்தக் கிராம சேவையாளரிடம் அலைந்து திரிகின்றனர்.

இக்கிராம சேவையாளருக்கு புதிய உணவு அட்டைகள் போதியளவு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் விநியோகிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (37)

## தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன

கடந்த இரண்டு தினங்களாகக் காணவில்லையென வீட்டுக்காரரால் தேடப்பட்டு வந்த மல்லாகம் நீதி மன்ற வீதியைச் சேர்ந்த தம்பிமுத்து - சந்திரகாந்தா (20) என்ற யுவதி நேற்று முன்தினம் காலை ஆறு மணியளவில் வயல் வெளியில் உள்ள கிணறு ஒன்றில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் தற்கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல நவாலி கட்டுடையைச் சேர்ந்த வாலிபர் ஒருவரும் நேற்று முன்தினம் அலரிக்கொட்டை உண்டு தற்கொலை செய்துள்ளார்.

மேலும் நேற்று முன்தினம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் குடும்பத்தகராறால் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்ய எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரமும் இருவர் அலரிக்காய் உண்டு தற்கொலை செய்ததாகவும் கூறப்படுகிறது.

இணுவில் இன்பழகி (20) என்ற யுவதியும், உரும்பராயில் விஜபதாஸ் (36) என்பவரும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ப 11, 33,71)

## சகலரும் கடமைக்கு வருமாறு அரசாங்க அதிபர் அறிவிப்பு

நெருக்கடியான இக்கால கட்டத்தில் மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற சகல அரச ஊழியர்களும் தமது பங்களிப்பை நல்க வேண்டும் என யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ் செயலகத்தில் இடம் பெற்ற சகல செயலககிளைத் தலைவர்கள், அதிகாரிகளுக்கான கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார். (66)

## கிளிநொச்சி முல்லைத்தீவில் ஊரடங்கு நீக்கம்

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## சில இடங்களில்...

பட்டு விற்கப்படுகிறது.

நல்லூர் பகுதியிலுள்ள ஒரு கடையில் ஒரு இறாத்தல் பாண் 7.50 சதத்துக்கு விற்பனையானதும் குறிப்பிடத்தக்கது. (33)

## தீவுப்பகுதி ..

குடுதீவு, நயினாதீவு ஆகிய இரு கிராமங்களும் உள்ளடங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீவுப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு உதவி அரசாங்க அதிபர் போதாது என்று பல அமைப்புகள் உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்த மகஜர்களை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது (19)

## ஹெலி சுட்டதில் லொறிசேதம்

நிலா வெளி அஸ்பெஸ்ரஸ் சீமென்ற் கம்பனியை நோக்கி கடந்த திங்கட்கிழமை இங்கு வந்த ஹெலிக்கப்டர் ஒன்று சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடாத்தியது.

இதனால் கம்பனிக்கு முன்னால் அஸ்பெஸ்ரஸ் சீற் ஏற்றிக் கொண்டிருந்த லொறியின் முகப்புப்பகுதி பலத்த சேதமடைந்தது. (ப-11)

## அம்பாறை ..

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சுனில் (சின்னத்தம்பி அருமைநாயகம், கோணாவில் அக்கரைப்பற்று) ராஜர் (சேனைக் குடியிருப்பு) ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். இவ்விருவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (71)

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறறெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 06-12-90 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.